2005 மார்ச் 10]

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, இந்த மாநில பதிவுத் துறையிலே இன்னும் பதவி உயர்விலே நிறைய குளறுபடிகள் இருக்கின்றன. அந்தக் குளறுபடிகளை நீங்கள் நீக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆக, இந்த நிதிநிலை அறிக்கை என்பது ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், கல்விக்கு முக்கியத்துவமில்லை, வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவமில்லை, இங்கே வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவமில்லை, வேளாண்மைக்கு முக்கியத்துவமில்லை, தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவமில்லை. இப்படி எல்லா நிலைகளிலும் முக்கியத்துவம் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது. ஒட்டுமொத்தமாக தமிழுக்கு முக்கியத்துவமில்லை. எனவே, முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, புதுமை ஏதும் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கை. கடந்த ஆண்டினுடைய மறு பிரதியாக, நகலாக இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் வறட்சி மலிந்திருக்கிறது என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

4. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (11-03-2005) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, 11-03-2005 வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (11-03-2005) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-03-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதும் இல்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஆறாவது அறிக்கை (2003-2005).

52. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஏழாவது அறிக்கை (2003-2005).

53. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து எட்டாவது அறிக்கை (2003-2005).

54. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை (2003-2005).

55. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை (2003-2005).

56. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஆறாவது அறிக்கை (2003-2005).